இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.D.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 222 2378 Fax: 021 222 9041, ISSN 1391-7633

மலர் : 139 இதழ் : 20 பக்கங்கள் : 08 திகதி : 01.11.2015 விலை : 20.00



PUBLIC LIBRARY JAFFNA

# பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை

## இவரைப் பற்றி இவர்கள்...!



இவரது ஆளுமையையும், தலைமைத்துவப் பண்பையும், அறிவுத் திறமையையையும், தன்னலம் கருதாது இறை அன்புக்காகவும், மக்களின் நலனுக்காகவும் அர்ப்பணத்தோடு ஆற்றும் பணிகளையும் பெருமிதத்தோடு நினைவுகூர்கிறேன்.

பேரருட்திரு.
தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை



I offer him my best wishes, prayers and blessings and pray to God that he may continue to spend himself totally for the growth of the Kingdom of God.

**Late Rt. Rev. Dr. B. Deogupillai**

# புதிய ஆயரை வாழ்த்தி

## அன்றும்

### தலைமை பெறு பதங்காணும் தகைமை பெற்றீர்

கலைநிதியே முதுகலைமா மணியே அன்பின்
கருந்தனமே மனிதாபி மானக் கோனே
இலையெனவே கரம்நீட்டும் வறியோர் நெஞ்சில்
எப்போதும் தவிசுபெறும் இரக்கத்தோனே
அலையெறியும் புகழ்க்கடலின் ஆணி முத்தே
ஆயர்கள் தம் வரலாற்றுப் பொன்னேட்டின் கண்
தலைமை பெறு பதங்காணும் தகைமை பெற்றீர்
தவப்பயனே தாரணியில் வளர்க வாழ்க.

-காலஞ்சென்ற யாழ் ஜெயம் -

## இன்றும்

### யாழ் மறைமாவட்ட ஆயரே! ஆண்டகையே! பார்போற்ற வாழியவே பல்லாண்டு

மெல்லத்தான் அந்த நற்செய்தி வந்தாலும்
வெல்லமாய் இனித்தது எமக்கெல்லாம் என்பதனை
சொல்லத்தான் நினைத்து இக்கவிதையை எழுதுகிறேன்
வல்லவன் தீர்ப்பன்றோ வாழ்த்துகின்றோம் வணங்குகின்றோம்!

ஊர்காவற்துறை பெற்ற உத்தமரே! இனி
யார் காவல்? ஆடுகட்கு நீங்கள் தானே!
வண்ணங்கள் விதவிதமாய் இருந்தால் என்ன? தங்கள்
வளைகோலுக்குள் எல்லாம் ஒன்றுதானே
எண்ணங்கள் ஈடேற இறைவனவன்
எந்நாளும் துணையிருப்பார் உங்களுடன்.

- நவாலியூர் நாயகி

His simplicity of life and a spirit of obedience with God's will and deep-seated love for generations of God's children are a clear expression of his faith and dedication to his vocation.

**Rt. Rev. Dr. J. Kingsley Swampillai**



தமது முன்மாதிரிகையான கிறிஸ்தவ வாழ்வினால் பலருக்கு ஒளியாகவும், வழியாகவும் திகழ்ந்த பெற்றோருக்கு மகனாகப் பிறந்த இவர் சிறந்த ஆளுமை கொண்டவராக, பரந்த அறிவும் சிறந்த மனிதப்பண்புகளும் கொண்டவராக, அமைதியானவராக, நல் உள்ளம் படைத்தவராக பரிணமித்ததில் ஆச்சரியமில்லை.

பேரருட்திரு. இராயப்பு யோசப் ஆண்டகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தர் நகரத்தைக் காக்காவிடில் அதைக் காப்பவன் கண்விழிப்பது வியர்த்தம்

## ஏமது ஏண்ணும்

### புதிய ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் B. ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ். மறைமாவட்டத்தின் 8வது ஆயரா? 11வது ஆயரா?

புதிய ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் B. ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் யாழ். மறைமாவட்டத்தின் 8வது ஆயரென சில ஊடகங்களும் 11வது ஆயர் எனப் பாதுகாவலன் உட்பட வேறு சில ஊடகங்களும் செய்திகள் வெளியிட்டுள்ள இத்தருணத்தில், இந்த முரண்பாடு பற்றித் தெளிவுபடுத்துமாறு திருச்சபையின் வரலாற்று ஆசிரியர் அருட்தந்தை கலாநிதி S.V.B. மங்களராஜா அடிகளிடம் கேட்டபோது அவர் தந்த பதிலை இங்கு பிரசுரிக்கின்றோம்.

### ஆயர் ஓராசியோ பெற்றக்கினி யாழ்ப்பாணத்தின் முதல் ஆயர்

1833ம் ஆண்டு போத்துக்கல் அரசு தனது நாட்டிலும் தான் கத்தோலிக்க திருச்சபையை அறிமுகம் செய்த குடியேற்ற நாடுகளிலும் எல்லாத் துறவற சபைகளையும் தடை செய்தது. இத்தடை இலங்கையையும் பாதித்தது. ஏனெனில், இதனால் கோவாவிலிருந்து ஒரட்டோறிய சபைக் குருக்கள் இலங்கை வருவது தடைப்பட்டது. எனவே, இப்பகுதிகளில் உரோமை விசுவாசப்பரப்புதல் சபை தலையிடவேண்டிய தேவை ஏற்பட்டது. படிப்படியாக எல்லா இடங்களிலும் நேரடியாக உரோமை திருப்பீடத்தில் தங்கியிருக்கக்கூடிய அப்போஸ்தலிக்க மாகாணங்களை (Apostolic Vicariates) ஏற்படுத்தியது.

திருத்தந்தை 16ம் கிரகோரியார் (1831-1846) Ex munere pastoralis ministeri என்ற மடல் வழியாக 1834ம் ஆண்டு டிசம்பர் 3ம் திகதி இலங்கையை கொச்சின் மறைமாவட்டத்திலிருந்து பிரித்து நேரடியாக உரோமைத் திருப்பீடத்தில் தங்கியிருக்கக்கூடிய அப்போஸ்தலிக்க மாகாணமாக ஏற்படுத்தினார். புதிய இந்த இலங்கை அப்போஸ்தலிக்க மாகாணத்திற்குப் பொறுப்பாக அப்போது இலங்கையில் பணியாற்றிக்கொண்டிருந்த இந்திய ஒரட்டோறியன் சபை முதல்வரும் குரு முதல்வருமாகிய பிரான்சிஸ் சேவியர் அடிகள் நியமிக்கப்பட்டார். ஆனால், இந்த நியமனக் கடிதம் வந்து சேருமுன்னரே இவர் 1834 ஜனவரி 11ம் திகதி இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அடுத்த தெரிவு, இவருக்குப்பின் ஒரட்டோறியோ சபை இலங்கை முதல்வராகவும் குரு முதல்வராகவும் பொறுப்பேற்றிருந்த விசேந்தேருடா றொசாய்ரோ அடிகளாவார். இவர் 1836ம் ஆண்டு டிசம்பர் 3ம்திகதி நியமனம் பெற்றார். 1838 ஜனவரி 14ம் திகதி கொழும்பு புனித லூசியாஸ் ஆலயத்தில் இலங்கை அப்போஸ்தலிக்கப் பொறுப்பாளராக (Apostolic Vicar) பொறுப்பிலமர்த்தப்பட்டார். இதே வருடம் டிசம்பரில் இவர் இந்தியாவிலுள்ள வெராப்பொலி நகரில் அந்நகர அப்போஸ்தலிக்க பொறுப்பாளரால் ஆயராகத் திருப்பொழிவு செய்யப்பட்டார். இவ்வாறாக விசேந்தேருடா றோசாய்ரோ இலங்கையின் முதல் ஆயர் ஆனார்.

1842 ஏப்ரல் 29ல் இவர் இறக்கும்வரை இப் பொறுப்பில் இருந்தார். 1843ம் ஆண்டு மே மாதம் 8ம் திகதி அடுத்த ஆயராக இன்னொரு இந்திய ஒரட்டோறியன் குரு கேதானோ அந்தோனியோ (Gaetano Antonio) நியமிக்கப்பட்டாலும் பின்வந்த காலத்தில் ஐரோப்பிய குருக்களையே நம்பியிருக்கவேண்டியிருந்தது என்பதை விசுவாசப் பரப்புதல் சபை உணர்ந்தது.

இதன்படி, 1842ம் ஆண்டு டிசம்பர் 7ம் திகதி இத்தாலிய ஒரட்டோறியன் சபைக்குருவாகிய ஓராசியோ பெற்றக்கீனி இலங்கை வந்தார். இவர் 1845 பெப்ரவரி 17ம் திகதி ஆயர் கேதானோ அந்தோனியோவுக்குப்பின் பொறுப்பேற்கும் ஆயராக (coadjutor) நியமனம் பெற்றார். அத்துடன் இவர் இலங்கையின் வடபகுதியை (யாழ்ப்பாண விக்காரியேற் அல்லது Nothern Vicariote) பராமரிக்கவும் ஏற்பாடானது.

ஆயர் கேதானோ அந்தோனியோ அவர்கள் ஓராசியோ பெற்றக்கீனி அவர்களை ஆயராக கொழும்பு புனித லூசியா ஆலயத்தில் 1846ம் ஆண்டு பெப்ரவரி மாதம் திருப்பொழிவு செய்தார். இவ்வாறு இவர் இலங்கையின் முதலாவது ஐரோப்பிய ஆயராகவும், இலங்கையில் முதல் திருப்பொழிவு பெற்ற ஆயராகவும் விளங்கினார்.

1847ம் ஆண்டு செப்ரெம்பர் 9ம் திகதி இலங்கை வடக்கு, தெற்கு என இரு விக்காரியேற்றுக்களாகப் பிரிவதையும் உறுதிப்படுத்தி, எல்லைகளையும் வகுத்து, ஆயர்களின் அதிகாரங்களையும் Pro Apostolic Muneris Officio என்ற மடல் வழியாக விசுவாசப் பரப்புதல் சபை பிரகடனப்படுத்தியது. இதன்படி, Nothern Vicariate அல்லது யாழ்ப்பாண விக்காரியேற்றின் முதல் ஆயராக ஆயர் ஓராசியோ பெற்றக்கீனி பணியாற்றினார். இந்த வரிசையில் தற்போது நியமனம் பெற்றுள்ள எமது புதிய ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் B. ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் யாழ். மறைமாவட்டத்தின் 11வது ஆயராக நியமனம் பெற்றுள்ளார்.

இருப்பினும், 1849ம் ஆண்டு வடக்கும் தெற்கும் (கொழும்பும் யாழ்ப்பாணமும் ஒன்றில் ஒன்று தங்கியிராத தனித்தனி அப்போஸ்தலிக்கப் பிரதேசங்களாக ஒதுக்கப்பட்டன.

1857ல் ஆயர் பெற்றக்கீனி இறைவனடி சேர்ந்ததும் அமல மரித் தியாகிகள் சபையை அப்போஸ்தலிக்க விக்காராக நியமிக்கப்பட்டார். செமேரியா அடிகள் அமல மரித் தியாகிகள் சபையினரின் பொது அமர்வுக்கு ஐரோப்பா சென்றவிடத்து அச்சபையின் நிறுவுனர் ஆயர் புனித யூஜின் டி மசனட் செமேரியா அடிகளை ஆகஸ்ட் 7, 1856ல் ஆயராகத் (பெற்றக்கீனிக்குப்பின் அவரைத் தொடர்ந்து வரும் ஆயராக) திருப்பொழிவு செய்தார். ஆயர் செமேரியா அடிகள் 1868ல் ஜனவரி 23ல் ஐரோப்பா சென்ற போது இறைவனடி சேர்ந்தார். தொடர்ந்து கிற்ஸ்தோப்பர் பொன்ஜீன் அடிகள் (அ.ம.தி) ஜீலை 5ம் திகதி 1868ல் யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க விக்கார் ஆக நியமனம் பெற்றார். 1883ம் ஆண்டு அதுவரை இரண்டு அப்போஸ்தலிக்க பிரதேசங்களாக இருந்த இலங்கை, கண்டி விக்காரியேற்றுடன் மூன்றாகப் பிரிக்கப்பட்டது. அத்துடன் ஆயர் பொன்ஜீன் உடைய இடத்திற்கு மெலிசன் யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க விக்கார் ஆனார். மெலிசன் அடிகள் 1880 ஆண்டு ஜனவரி 24ம் திகதி ஆயர் பொன்ஜீன் அடிகளால் அவரது துணை ஆயராக திருப்பொழிவு செய்யப்பட்டார்.

1886ம் ஆண்டு இலங்கைத் திருச்சபையில் ரோமைத்திருப்பீடத்தால் ஆட்சிக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது. தொடர்ந்து 1893ல் இலங்கையில் 5 மறை மாவட்டங்கள் (கொழும்பு அதியுயர் மறைமாவட்டம், மற்றும் அதன் கீழ் வரக்கூடிய யாழ்பாணம், கண்டி, காலி, திருகோணமலை மறைமாவட்டங்கள்) உண்டாயின.

இலங்கையில் ஆட்சிக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்ட போது யாழ்ப்பாண விக்காரியேர் வதிவிட ஆயராக மெலிசன் ஆண்டகை இருந்தார். சிலர் இதிலிருந்து ஆயர் மெலிசன் தான் யாழ் மறைமாவட்ட முதல் ஆயர் என்று சிலர் கருதுவர். இதன்படி எமது புதிய ஆயர் 8ஆவது ஆயராகக் கருதப்படுவர்.

## பிள்ளைகளுடன் "நேரத்தை வீணாக்குவது" பெற்றோருக்கு மிக முக்கியம்

"பெற்றோரே, உங்கள் பிள்ளைகளுடன் "நேரத்தை வீணாக்குவது" எப்படி என அறிந்திருக்கிறீர்களா? ஒவ்வொரு நாளும் நீங்கள் செய்ய வேண்டிய மிக முக்கியமான காரியங்களில் இதுவும் ஒன்று" என்பது, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் டுவிட்டர் செய்தியாக இச்செவ்வாயன்று வெளியிடப்பட்டுள்ளது.

## குருநகர்ப் பங்கின் மறைக்கல்வி வாரம்

குருநகர்ப்பங்கில்மறைக்கல்வி வாரமானது. 28.09.2015 - 04.10.2015 வரையான காலப் பகுதியில் நடைபெற்றது. இம் மறைக்கல்வி வாரத்திலே மாணவர்களின் திறமைகள் ஆளுமைகள், மற்றும் ஆன்மீகத்தை வெளிப்படுத்தும் நிகழ்வுகள் பங்குத்தந்தை R.C.X நேசராஜா அடிகளாரின் ஆலோசனைக் கேற்ப உதவிப்பங்குத்தந்தை டினேஷன் அடிகளாரின் வழிகாட்டுதலில் நடைபெற்றது. முதல் இருநாட்களும் மாணவர்கள் வகுப்பு ரீதியாக பிரிக்கப்பட்டு தனி விளையாட்டுக்களும் மற்றும் கயிறு இழுத்தல், கிளித்தட்டு, கிரிக்கட், கூடைப்பந்து போன்ற குழு விளையாட்டுக்களும் இடம்பெற்றன. மூன்றாம் நாள் மாணவர்களுக்கான மறை அறிவுப் போட்டியும் நடைபெற்றது. பின்னர் வியாழக்கிழமை தொடக்கம் சனிக்கிழமை வரை மறைக்கல்வி சமூகத்தினருக்கான ஆன்மீக ஆயத்தமாக நற்கருணை ஆராதனைகள் நடைபெற்றன. அனைத்து வழிபாடுகளையும் மாணவர்கள் மிகவும் சிறப்பாகவும் நேர்த்தியாகவும் நிறைவேற்றியது பாராட்டுதற்குரியதாகும்.

இறுதியாக 04.10.2015 ஞாயிற்றுக்கிழமை திருப்பலியை மறையாசிரியர்கள் சிறப்பித்தனர். இச் சிறப்புத் திருப்பலியை பங்கின் முன்னாள் உதவிப்பங்குத்தந்தையும் புனித பத்திரிசியார் கல்லூரி நிதியாளருமாகிய அருட்தந்தை எ.எட்விநாதன் அடிகளார் நிறைவேற்றினார். மறைக்கல்வியின் தன்மை மற்றும் மறையாசிரியர் பணிவாழ்வு எப்படிப்பட்டவையாக அமைய வேண்டுமென மிகவும் ஆழமான ஓர் மறையுரையும் ஆற்றினார். திருப்பலியில் மறையாசிரியர்கள் தமது அர்ப்பண வாக்குறுதியைப் புதுப்பித்துக் கொண்டனர். இறுதியில் திருப்பலியின் நிறைவினில் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் மறையறிவுப் போட்டி என்பவற்றில் வெற்றியீட்டிய மாணவர்களிற்கு பங்குத் தந்தையர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன. இவ்வருடம் இம்மறைக் கல்வி வாரமானது ஓர் அர்த்தமுள்ள விழாவாக அமைந்ததே சிறப்பு. மாணவர்களின் மறையறிவு அவர்களின் விளையாட்டுத்திறன் மற்றும் அவர்களின் ஆன்மீக வெளிப்பாட்டிற்கு இம் மறைக்கல்வி வாரம் ஓர் சிறந்த களமாக அமைந்தது.

*மறையாசிரியர் குழுமம்*
*குருநகர்*

## இலங்கைக்கு வருவதுபற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை



### அருட்தந்தை S.J. இம்மானுவேல் அடிகள்

இலங்கையில் போருக்குப் பின்னரான ஒப்புரவு முன்னெடுப்புக்களுக்கு உதவிபுரிய இலங்கைக்கு வருமாறு ஜனாதிபதியும், வெளி உறவு அமைச்சரும் தன்னை அழைத்துள்ளதாகத் தெரிவித்த உலகத் தமிழர் பேரவைத் தலைவர் அருட்தந்தை S. J. இம்மானுவேல் அடிகள், தான் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ள பொழுதிலும் இலங்கைக்கு வருவதுபற்றிய எவ்வித முடிவையும் தான் இன்னும் எடுக்கவில்லையென பாதுகாவலனுக்குத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஒப்புரவுபற்றி தான் தொடர்ந்தும் குரல் கொடுத்துக்கொண்டும், எழுதிக் கொண்டும் இருப்பேனென்று கூறிய அருட்தந்தை இது அங்குள்ள கிறிஸ்தவர்களுக்கும், எல்லா சமயத்தைச் சார்ந்தவர்களுக்கும் முன் வைக்கப்பட்டுள்ள பெரும் சவால் என்றும் குறிப்பிட்டார். உலகத் தமிழர் பேரவை உட்பட 15 தமிழர் அமைப்புக்கள் இலங்கையில் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## குருக்களுக்கான வருடாந்தத் தியானம்

யாழ். மறைமாவட்டக் குருக்களுக்கான வருடாந்தத் தியானம் இவ் வருடமும் இரண்டு குழுக்களாக நடைபெறுகின்றது. முதாலாவது குழு வினருக்கான தியானம் நவம்பர் 1ம் திகதி முதல் 7ம் திகதி வரையும், இரண்டாவது குழுவினருக்கான தியானம் நவம்பர் 15ம் திகதி முதல் 21ம் திகதி வரையிலும் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெறுகிறது. இயேசு சபைக் குருக்களினால் இத்தியானங்கள் வழிநடத்தப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
# பின்னணி, தோற்றம், வளர்ச்சி

- அருட்பணி. S.V.B. மங்களராஜா -

## பின்னணி

யாழ்ப்பாண மறைமாவட்டம் 19ம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தங்களிலேயே ஒரு மறை மாவட்டமாக ரோமைத் திருப்பீடத்தினால் ஏற்படுத்தப்பட்டாலும் இம் மறை மாவட்டத்திற்கு ஒரு நீண்ட வரலாற்றுப் பின்னணியுண்டு. சில தனித்துவங்களும் உண்டு. தற்போது இலங்கையில் உள்ள கொழும்பு அதியுயர் மறைமாவட்டமும் மற்றும் பதினொரு மறைமாவட்டங்களும் எனும் நிலையை அடைவதற்கு இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை பல்வேறு கட்டங்களையும், வளர்ச்சிப்படிகளையும் கடந்து வந்துள்ளது.


## போர்த்துக்கல்லில்

15ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவின் முக்கிய கடல் வல்லாதிக்கம் கொண்ட ஐபீரியன் தீவகற்ப நாடுகளாக ஸ்பானியாவும், போர்த்துக்கல்லும் இருந்தன. இந்நாடுகள் கத்தோலிக்க நாடுகளாகவுமிருந்தன. இந்நாடுகளின் ஆட்சியாளர்கள் அதுவரை போதியளவு அறியப்படாத, மேற்கிலும், கிழக்கிலும் உள்ள நாடுகளுக்குக் கடல் மார்க்கத்தைக் கண்டு பிடித்துத் தமது செல்வத்தையும், செல்வாக்கையும் வளர்த்து விரிவுபடுத்துவதில் ஈடுபாடு காட்டினர். இதற்காக இந்நாடுகள் தமக்கெனப் போரிடும் பெரும் படைகளைக் கட்டியெழுப்பிப் புதிய நாடுகளையும் பிடிக்கத் தொடங்கின. அத்துடன் இந்நாட்டு அரசர்களும் தமது ஆட்சியை ஏற்படுத்தி வியாபாரத்தை வளர்த்துச் செல்வம் சேர்ப்பதுடன் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதிலும் கருத்தாயிருந்தனர்.

இந்நாட்களில் கத்தோலிக்க சமயத்தை தொலைவில் மேற்கிலும் கிழக்கிலும் புதிதாகக் கண்டு பிடிக்கும் நாடுகளில் பரப்ப மறைப்பணியாளரை அனுப்பவும், அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கிப் பராமரிக்கவும், அவர்களுடைய பணிகளை ஒருங்கிணைக்கவும் போதிய வல்லமையையும், வசதியையும் ரோமைத் திருப்பீடம் கொண்டிருக்கவில்லை. எனவே இந்நாட்களில் இருந்த பரிசுத்த திருத்தந்தையர்கள் ஸ்பானியா, போர்த்துக்கல் ஆகிய நாடுகள் தாம் கண்டுபிடித்துத் தமது ஆட்சியை ஏற்படுத்தும் நாடுகளில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதற்குரிய உரிமையையும் அதை வினைத்திறனுடன் செய்ய பல சலுகைகளையும் 'பத்ரோவாதோ' (Padroado) எனும் பெயரில் வழங்கினர்.

இவ்விரு நாடுகளுக்கும் வழங்கப்பட்ட இந்த உரிமைகளின்படி அத்லாந்திக் சமுத்திரத்திலுள்ள அசோரஸ் தீவுகளுக் கருகாமையில் வடக்குத் தெற்காக ஊடறுத்துச் செல்லும் கோட்டிற்குக் கிழக்கேயுள்ள நாடுகளில் போர்த்துக்கல் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பும் உரிமையையும் மேற்கேயுள்ள நாடுகளில் மறைபரப்பும் உரிமையை ஸ்பானியாவும் பெற்றன. இதில் முக்கிய பங்களிப்பை வழங்கிய பாப்பரசர்கள் 5ம் நீக்கிலஸ் (1447-1455), 3ம் கலிஸ்ரஸ் (1455-1458) 4ம் சிக்ஸ்ரஸ் (1471-1484) ஆகியோராவர். இதன்படி தனது பொறுப்புக்களை நன்கு உணர்ந்து பணியாற்றிய போர்த்துக்கல் அரசர்களுள் முக்கியமானவர், அதிலும் குறிப்பாக இலங்கையில் கத்தோலிக்க திருச்சபை நவீன காலத்தில் போர்த்துக்கேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட போது முக்கிய பங்களிப்பை வழங்கிய மன்னன் டொன் மனுவல் (1495-1521) ஆவார்.

மேற்கிலும், கிழக்கிலும் கண்டு பிடிக்கப்படும் நாடுகளில் கத்தோலிக்க மறை பரப்புப்பணி மேற்குறிப்பிட்டபடி பிரிக்கப்பட்ட பின்னணியில் 15ம் நூற்றாண்டின் இறுதியிலும் 16ம்நூற்றாண்டின் ஆரம்பத்திலும் கிழக்கில் இந்தியத்துணைக் கண்டம் உட்பட போர்துக்கேயரின் ஆட்சி ஏற்படுத்தப்பட்ட, ஏற்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த நாடுகளுடன் தென் அமெரிக்காவில் போர்த்துக்கல்லின் குடியேற்ற நாடாக மாறிக்கொண்டிருந்த பிறேசில் உட்பட்ட பிரதேசங்கள் எல்லாம் வட மேற்கு ஆபிரிக்காவுக்கருகாமையில் உள்ள மடேய்ரா (Madeira) தீவுக்கூட்டத்திலுள்ள புஞ்சால் (Funchal) எனும் மறை மாவட்டத்தின் கீழ் வந்தன. இந்த புஞ்சால் எனும் மறை மாவட்டம் போர்த்துக்கல் நாட்டின் முக்கிய நகரும் தலைநகருமான லிஸ்பன் நகரின் அதியுயர் மறைமாவட்டத்தின் கீழ் இயங்கும் மறைமாவட்டமாக இயங்கத்துவங்கியிருந்தது.




15ம் நூற்றாண்டின் இறுதியாண்டுகளில் தென் ஆபிரிக்காவின் நன்னம்பிக்கை முனையைக்கடந்து இந்திய துணைக்கண்டம் மற்றும் தூரகிழக்கு நாடுகள் படிப்படியாகப் போர்த்துக்கல்லின் காலனித்துவநாடுகளாகத்துவங்கின. தமக்கு ரோமைத்திருப்பீடத்தால் வழங்கப்பட்ட 'பத்ரோவாதோ' அதிகாரத்தைக் கொண்டு ஒரு புறம் நன்னம்பிக்கை முனை மறுபுறம் சீனா, ஜப்பான், மலாக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய பல்லாயிரக் கணக்கான சதுரமைல் வரை வியாபித்திருந்த பகுதி இந்தியாவில் போர்த்துக்கேயரின் முழுமையான கட்டுப்பாட்டில் வந்த கோவாவை மையமாகக் கொண்டு அக்காலத்தில் உலகின் மிகப் பெரிய மறைமாவட்டமாகவும், மிகவும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட மாவட்டமாகவும் 1534ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

## இலங்கையில்

போர்த்துக்கல் அரசன் டொன் மனுவல் இந்தியா மற்றும் தூரகிழக்கு நாடுகளைத் தனது அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஆணைபிறப்பித்து தனது பிரதிநிதியாக பிரான்சிஸ்கோ டி அல்மெய்டாவைப் பெரும் படையுடன் அனுப்பியபோது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கையைப்பிடிப்பதும் அவர்களது திட்டமாக இருந்தது. எனினும் 1505ம் ஆண்டு போர்த்துக்கல் கப்பற்படையணி இலங்கை வந்தது தற்செயலாகத்தான். இந்த நிகழ்வே இலங்கையில் நவீனகால கத்தோலிக்க சமயம் பரவுவதற்கான ஆரம்பப் புள்ளியாக விருந்தது. அக்காலத்தில் வளர்ந்துவந்து கொண்டிருந்த போர்த்துக்கேய ஆதிக்கத்துக்கும், வியாபாரத்திற்கும் அச்சுறுத்தலாக இருந்த ஒரு இஸ்லாமிய வியாபாரக் கப்பற் தொடரணியைக்கைப்பற்றுமாறு பிரான்சிஸ்கோ டி அல் மெய்டா தனது மகன் லொரன்சோ டி அல்மெய்டாவின் தலைமையில் ஒரு கப்பற்படையணியை அனுப்பினான். இந்தக்கப்பற்படையணி கடும் காற்றில் சிக்குண்டு காலிக்கருகாமையில் இலங்கையின் மேற்குக் கரையை வந்தடைந்தது. பின்னர் அவர்கள் கரையோரமாகக் கொழும்பை வந்தடைந்தனர். அப்போது இலங்கையின் முக்கிய அரசாக விளங்கிய கோட்டே இராசதானியில் 9வது தர்மபராக்கிரமபாகு (1489-1513) ஆட்சி செய்து வந்தான். இந்த அரசனுடன் ஒரு பாதுகாப்பு உடன்படிக்கை செய்ததுடன், அப்போது இலங்கையில் தங்கியிருக்க வேண்டிய ஆயத்தங்களுடன் வராதபடியால் லொறன்சோ டி அல்மெய்டாவும் அவரது படையணியும் திருப்பிச் சென்றது. அதற்கு முன் கொழும்பில் புனித லவுறேஞ்சியாரின் பாதுகாவலில் ஒரு சிற்றாலயம் கட்டப்பட்டு அப்போது வந்திருந்த போர்த்துக்கேய கப்பற் படையணியின் ஆன்மீக குருவாக உடன்வந்த பிரான்சிஸ்கன் சபைக்குருவாகிய விசெந்தே அடிகளால் முதல் முறையாக இலங்கை மண்ணில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஆன்மதாகமுள்ள இக்குரு தொடர்ந்து இலங்கையிலேயே தங்கி சுதேச மக்கள் மத்தியில் மறைபணியாற்ற விரும்பியிருந்தும் படையணி முழுவதுமே திரும்பிச் சென்றதால் இவரும் அவர்களுடன் செல்ல வேண்டியிருந்தது.

பின்னர் போர்த்துக்கேய மன்னன் டொன் மனுவல் 1515ம் ஆண்டு அப்போது இந்தியாவில் போத்துக்கேயர் பிடித்து வைத்திருந்த மேற்குக்கரையோரப் பகுதிகளின் வைஸ்றோயாக இருந்த லோப்போ சுவாறெஸ் டி அல்பர்காரியாவை இலங்கையில் ஒரு நிரந்தரமான கோட்டையொன்றைக்கட்டுமாறு பணித்தான். அதற்கமைய அவர் 850 போர் வீரர்களுடனும் ஒரு குருவானவருடனும் வந்து கொழும்பில் ஒரு கோட்டையொன்றைக் கட்டினார். இந்தக் குருவானவர் தான் இலங்கையில் நிரந்தரமாகத் தங்கத்துவங்கிய கத்தோலிக்க குருவாவார். இவர் ஆரம்பத்தில் போத்துக்கேயர் போர்வீரர்களதும், அலுவலர்களதும், அவர்களது குடும்பத்தவர்களதும் ஆன்மீக நலன்களைக் கவனித்தாராயினும் 1518ல் இருந்து சுதேசிகளையும் கத்தோலிக்க சமயத்தில் சேர்க்கத் துவங்கினார். சில வருடங்களின் பின் வேறு கத்தோலிக்க குருக்களும் அவ்வப்போது வந்து பணியாற்றியதாகவும் இதனால் சுதேசிகளின் மதமாற்றம் கூடுதலாக ஏற்பட்டதாகவும் சில தரவுகள் உள்ளன. சுவாமி ஞானப்பிரகாசர் தமது பதிவுகளில் மொன்தேயிரோ எனும் குரு 1536ம் ஆண்டு இறப்பதற்கு முன் பல ஆலயங்களைக் கட்டியதாகவும் பல சுதேசிகளை கத்தோலிக்கத் திருமறையில் சேர்த்ததாகவும் குறிப்பிடுகின்றார். போர்த்துக்கல் அரசன் டொன் மனுவல் இலங்கையில் கத்தோலிக்க சமயம் பரவுவதில் கொண்டிருந்த ஆர்வம் 1521ம் ஆண்டு அவன் எழுதி அனுப்பிய வழிகாட்டல்களிலிருந்து தெளிவாகின்றது. அதன்படி எவ்வளவு அதிகமானவர்களைக் கத்தோலிக்க திருமறையில் சேர்க்க முடியுமோ அதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். புதுக்கிறிஸ்தவர்கள் நன்கு பராமரிக்கப்பட வேண்டும். பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள கிறிஸ்தவர்களுக்கு விசேட உதவிகள் வழங்கப்படவேண்டும். ஆலய வழிபாடுகள் பக்திசிரத்தையுடன் நடத்தப்பட வேண்டும் போன்ற வழிகாட்டல்கள் குறிப்பிடத்தக்கவை.

கோட்டே இராசதானியில் சில குருக்கள் அங்குமிங்குமாக சுதேசிகள் மத்தியில் பணியாற்றிக் கொண்டிருந்தாலும் யாழ்ப்பாண அரசில் கத்தோலிக்க குருக்கள் சென்று பணியாற்றுவதென்பது அந்நாட்களில் சிரமமான விடயமாகவேயிருந்தது. அப்போது யாழ்ப்பாண அரசனாக இருந்த செகராசசேகரன் (சங்கிலியன்) (1519-1561) போர்த்துக்கேயர் தனது அரசுக்கு அச்சுறுத்தலாக இருப்பர் என்று கருதியதால் அவர்கள் பரப்பிய கத்தோலிக்க சமயத்தைத் தனது அரசில் பரவவிட்டால் அதனூடாக போர்த்துக்கேயர் தனது அரசுக்குள் ஊடுருவி அதனை கைப்பற்றிவிடுவர் என்று கருதியதால் கத்தோலிக்க குருக்கள் வருவதையும் அவன் கடுமையாக எதிர்த்தான். இதனால்தான் 1544ம் ஆண்டு இவனது ஆட்சிக்குட்பட்ட மன்னார் தீவில் பெருமளவானோர் கத்தோலிக்க சமயத்தைத் தழுவியதைக்கேள்வியுற்ற சங்கிலியன் தனது படையினரை அனுப்பி 600க்கு மேற்பட்ட புதுக்கிறிஸ்தவர்களைக் கொன்றான். எனவேதான் சங்கிலியன் காலத்தில் கத்தோலிக்க குருக்கள் ஒருசிலர் வியாபாரிகள் போல வேடம் அணிந்து யாழ்ப்பாண இராச்சியத்தில் பணியாற்றி சில சுதேசிகளை இரகசியமாக மதம்மாற்றியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்மேல் தியான துறவறத்திற்குப் புத்துயிருட்டிய மறைவல்லுனர் புனித அவிலா தெரேசா

அருட்சகோதரி எம். பவளராணி அ.கா

(சென்ற இதழில் தொடர்ச்சி)

காலம் செல்ல இக்கட்டுப்பாடுகள் சிறிது தளர்த்தப்பட்டாலும் அது தீவிரமான தவ வாழ்வை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவிலாவில் நிறுவப்பட்டிருந்த கார்மேல் கன்னியர் மடம் மனிதவதார துறவறமடம் என அழைக்கப்பட்டது. 15ம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட இத்துறவற சபை மிக விரைவில் வளர்ச்சியடைந்திருந்தது. தெரேசா இக்கார்மேலில் இணைந்தபொழுது ஏறக்குறைய 140 அருட்சகோதரிகள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. 1536ல் முதல் வாக்குத் தத்தத்தை எடுத்துக்கொண்டு தன் துறவற வாழ்வினை ஆரம்பித்தார்.

இளம் துறவியாக அவர் வாழ்ந்த போது தனது பெரும்பான்மையான நேரத்தை நண்பர்கள், உறவினர்களுடன் வரவேற்பறையில் உரையாடுவதில் செலவிட்டார். செப வாழ்வில் ஏறக்குறைய இருபது வருடங்களாக எவ்வித இறையனுபவமும் இல்லாது அர்த்தமற்ற வாழ்வை வாழ்ந்துக்கொண்டிருந்தார். வரட்சியான அவரின் துறவறவாழ்வில் இறைவன் ஊடுருவினார். உலக இன்பத்திலும், மனித நட்பிலும் பிணைக்கப்பட்டிருந்த அவர் இறையருளினால் அனைத்தையும் முற்றாகத் துறந்து இறைவனின் அன்பிலும், நட்புறவிலும் ஒன்றிணைவதில் இன்பம் கண்டார். துறவற, செப வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு அனைத்தையும் ஒதுக்கிவிட்டு இறைவன் அவருக்கு வழங்கிய விஷேட ஆசீர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி தாராள மனதுடன் இறைபக்தியில் ஆழமாக வளரத்தொடங்கினார். அவிலா தெரேசா பல துறைகளில் திறமையுடையவராக இருந்தார். வீட்டு வேலைகளில் தேர்ச்சி பெற்றிருந்ததுடன், ஆடைகள் வெட்டித் தைப்பதிலும்; பூவேலைப்பாடுகள் செய்வதிலும் திறமை பெற்றிருந்தார். தந்தையைப் போன்று நூல்கள் வாசித்து அறிவினை விருத்தி செய்ததுடன், கவிதைகள் புனைவதிலும், ஓவியம் வரைவதிலும், சங்கீதத்தை இரசிப்பதிலும், ஆர்வமுடையவராக இருந்தார். துறவற வாழ்வின் கடமைகளையும், சமய அனுஷ்டானங்களையும், குழு வாழ்வின் நெறி முறைகளையும் அர்ப்பணிப்புடன் வாழ்ந்தார். தன்னுடன் வாழ்ந்த குழு அருட்சகோதரிகளுக்கு ஆன்மீக வழிகாட்டியாகவும், ஆலோசனை வழங்குபவராகவும் இருந்து அவர்களின் ஆன்மீக வாழ்வில் முக்கிய பங்களிப்பு ஆற்றினார்.

அவிலா தெரேசா தனது நீண்டகால கடின முயற்சியின் பின்னர் செபத்திலும், தியான வாழ்விலும் இறைவனிடம் நெருங்கிய ஒன்றிப்பில் வாழ்வதில் வெற்றி கண்டார். இயேசுவும் அவருக்குத் தன்னை வெளிப்படுத்தி, ஆசீகளை வழங்கியதுடன், செபத்தின் வழி பல தரிசனங்களையும், அனுபவங்களையும் வழங்கினார். பல தடவைகளில் பரவச நிலைக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டதுடன் அவருக்கு இயேசு காட்சி கொடுத்து அவரை விசுவாசத்தில் ஆழப்படுத்தி, அவர் முன்னெடுத்த பல வேலைகளுக்குத் திடத்தையும் வழங்கினார். இறையனுபவத்தினால் தூண்டப்பட்டவராக அக்கால நடைமுறையில் இருந்த குழுவாழ்வில் மறுமலர்ச்சியைக் கொண்டுவரவும், புதிய இல்லங்களை ஸ்தாபிக்கவும், அவர்கள் செப வாழ்வினை ஆழப்படுத்தவும் பல முயற்சிகளை எடுத்தார். இப்பணியில் ஈடுபட்ட வேளைகளில் அவருக்குத் தடையாக வந்த இடையூறுகளை, சவால்களை மிகத்துணிச்சலுடன் இறையாசீருடன் எதிர்நோக்கித் தன் பணியை நிறைவேற்றினார். இறைவனுடன் ஒன்றித்து வாழும்போது எந்தத் தடை பற்றியும் கவலைப்படத் தேவையில்லை என்பதனை வாழ்ந்து காட்டினார்.

"எவற்றாலும் நீ கலக்கமடையக்கூடாது.
எவையும் உன்னை அச்சுறுத்தக்கூடாது
அனைத்தும் மறைந்து விடும்
இறைவன் ஒருவரே மாறாதவர்
பொறுமையினால் அனைத்தையும் அடைய முடியும்
இறைவனுடன் வாழ்பவருக்கு தேவை ஒன்றுமில்லை
இறைவனே நிறைவு" என்பது அவரது வார்த்தைகளாம்.

ஆரம்பகால கார்மேல் தியான வாழ்வின் இறுக்கமான ஒழுக்க நெறிகள், வாழ்க்கை முறையானது காலச் சக்கரத்தின் ஓட்டத்தினால், நவீன உலகின் மாற்றங்களினால் புனிதத்துவம் குறைந்து, லௌகீக உலகின் விளைவுகளை உள்வாங்கிய காலத்தில் அவிலா தெரேசா தனது செப அனுபவத்தினாலும், இறைவனின் ஆசீர்களாலும் தூண்டப்பட்டவராய் கார்மேல் துறவற வாழ்வில் மாற்றத்தை, புத்துயிரைக் கொடுக்கப் புறப்பட்டார். பல மடங்களை ஸ்தாபித்ததுடன் கார்மேலில் ஆன்மீக வாழ்க்கை மாற்றத்தையும் கொண்டு வந்தார். இப்பணியில் பல சவால்கள், முரண்பாடுகள், தோல்விகள் உள்ளிருந்தும், வெளியிருந்தும் வந்தபோதிலும் மனம்தளராது இறைவனின் சக்தியுடன் நினைத்ததைச் சாதித்த பெண்ணாக கார்மேல் துறவியாக வரலாற்றில் இடம் பெற்றார்.

## அவரது சிந்தனைகள்

இவர் எழுதிய "நிறைவிற்கான வழி" செபம் பற்றிய ஆழமான சிந்தனைகளுடன் எவ்வாறு செபிப்பது பற்றிய விளக்கமான கருத்துக்களையும், வழிமுறைகளையும் கூறுகிறது. அவர் எழுதிய மற்றுமொரு நூலான "உள்ளார்ந்த அரண்மனை" என்பது ஒரு ஆன்மா இறைவனைத் தேடி, தன்னையே ஒருமுகப்படுத்தி, தியானம் மூலம் பல இடையூறுகளைக் கடந்து அவருடன் சங்கமமாவது பற்றிக் குறிப்பிடுகின்றது. இவரின் புனித வாழ்வும், இறை ஞானத்தை வெளிப்படுத்தும் நூல்களும் அவரைத் திருச்சபையில் முதல் பெண் மறைவல்லுனராக உயர்த்தியுள்ளது. அவர் செபவாழ்வின் பிரதிபலிப்பான "உள்ளார்ந்த அரண்மனை" நூல் செபவாழ்வின் ஏழு படிமுறைகளை எமக்கு எடுத்துக் கூறுகின்றது. முதலாவது மாளிகை உலக சார்பான பெருமை, இன்பங்கள் போன்றவற்றுடன் பிணைந்த ஆன்மா, தாழ்மை எனும் புண்ணியத்தால் தன்னைப்பற்றி அறிந்து கொண்டு, உலக ஆசையில் இருந்து விடுபட வேண்டிய நிலையினைக் குறிப்பிடுகின்றது. இரண்டாவது படிமுறையில் இறைவனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்ற வைராக்கியத்துடன் உலக ஆசைகளுடன் போராடும் நிலையைக் கூறுகின்றது. இதன்பொழுது இறைவனின் ஆசீருக்கு ஒத்துழைப்பு வழங்கி, ஆன்மீக ஆலோசனை பெறவேண்டி பரிந்துரை செய்யப்படுகின்றது. மூன்றாவது நிலையில் தன் வாழ்வில் எதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதனைப் புரிந்துக்கொண்டு புனித வாழ்வை வாழத்துடிக்கும் ஆன்மாவின் நிலையை குறிப்பிடுகின்றது. இக்காலகட்டத்தில் செபத்திற்கும், ஞான வாசனைக்கும் உரிய நேரத்தை வழங்கி தானும் இறைவாழ்வில் வளர்வதுடன் மற்றவர்களுக்கும் உதவி செய்ய வேண்டும் என்பதனை ஊக்குவிக்கின்றது. நான்காவது மாளிகைக்குள் இறைவனுடன் ஒன்றித்து வாழ்பவர்கள் தான் நுழைய முடியும். இவர்கள் இறைபிரசன்னத்தில் வாழ்பவராகவும், ஆழ்ந்த தியானத்தில் இருப்பவர்களாகவும், புண்ணியங்களில் வளர்பவராகவும் இருப்பர். ஐந்தாவது படிமுறையில் ஆன்மா கிறிஸ்துவில் புது வாழ்வை வாழ்வது பற்றி குறிப்பிடப்படுகின்றது. ஆறாவது நிலையில் ஆன்மா இயேசுவின் மணமகளாக ஒன்றிணைவதைக் கூறுகின்றது. ஏழாவது மாளிகையில் அரசராகிய இயேசுக் கிறிஸ்துவை ஆன்மா மணம்புரிவதைக் கூறுகின்றது. இது ஒரு முழுமையான ஒன்றிப்பாகவும், செபம் மூலம் உயிர்த்த கிறிஸ்துவின் கனிகளை வழங்கித் திருச்சபைக்கு சேவை புரிவதாகவும் ஆன்மா மாறுகின்றது.

## அவரது ஆளுமைப் பண்புகள்

அவிலா தெரேசாவின் வாழ்வில் மிகத்துல்லியமாக வெளிப்படும் அவரது ஆளுமைகள், திறமைகள் பல. அவர் இறைவனுடன் செபம் மூலம் ஒன்றித்திருந்தார். அவர் பிரன்னத்தில் வாழ்பவராக பல தடவைகளில் பரவச நிலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன், இறைமகன் இயேசுவுடன், தன் நண்பனுடன் பேசுவது போல் பல சந்தர்ப்பங்களில் பேசி, தன் உள்ளார்ந்த போராட்டங்களில் வெற்றி பெற்றிருக்கின்றார். நல்ல குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்ட அவர் பல நல்ல பண்புகளுள்ளவராக, பரந்த அறிவுடையவராக இருந்ததுடன், எப்பொழுதும் தாழ்மையாக வாழ்ந்தார். தன்னுடைய குழு சகோதரிகளால் தப்பாக விளங்கிக் கொள்ளப்பட்டிருந்த பொழுதும் அவர் தாழ்மையாக, மௌனமாக இருந்துள்ளார். தன் குழு வாழ்வில் அனைத்து அருட்சகோதரிகளையும் அன்பு செய்ததுடன் அவர்களுக்கு எப்பொழுதும் உதவியாக இருந்துளளார். அனைவரையும் அரவணைத்து குழுவாழ்வுக்கு புத்துயிர் கொடுப்பவராக, சந்தோஷத்தின் அடையாளமாக இருந்தார். அனைவரையும், அனைத்தையும் துறந்து இறைவனுடன் பிணைக்கப்பட்டவராக வாழ்ந்ததால் "இறைவனே எனது நிறைவு" என்று தன் வாழ்க்கையை வாழ்ந்து காட்டினார். இறையன்பிற்காக தான் வேதனைப்படுவதை அவர் விரும்பி ஏற்றுக்கொண்டார். நான்கு சுவர்களுக்குள் வாழ வேண்டிய தெரேசா தன் சபையினை ஒழுங்குபடுத்த, புத்துயிர் கொடுக்க, புதிய மடங்களை ஸ்தாபிக்க துணிவுடன் பல சவால்களை முறியடித்து தைரியமாகத் தன் பணியினை இறைவன் சித்தப்படி நிறைவேற்றினார்.



துறவற வாழ்க்கைக்கான ஆண்டு முடிவுறும் காலகட்டத்தில் இருக்கும் நாம் எம் பாப்பரசர் கூற்றிற்கேற்ப மகிழ்ச்சியான வாழ்வை வாழ்வதன் மூலம் இறையன்பையும், இரக்கத்தையும் பகிர்ந்து கொள்ளும் சாட்சிகளாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம். அவிலா திரேசாவின் வாழ்வு எமக்கு ஒரு உதாராணமாக விளங்குகின்றது. கார்மேலுக்கான அழைப்பு, செபத்திற்கான அழைப்பாகும். இதனை எம் புனிதை வாழ்ந்து, அவர் அன்பில் நம்பிக்கை கொண்டு தன் பணிக்கு சவாலாக வந்த அனைத்தையும் எதிர்த்து துணிச்சலுடன் போராடி தன்னை முழுமையாக வெறுமையாக்கி எளிமையான வாழ்வில் வெற்றி கண்டார். இவ்வுலகில் வாழும் போதே ஆழ்ந்த செப ஒன்றிப்பின் மூலம் விண்ணக , இன்பத்தை சுவைக்க முடியும் என்பதனை வாழ்ந்து காட்டிய புனிதை அவிலா தெரேசா திருச்சபைக்கு அதிலும் கார்மேல் சபைத் துறவிகளுக்கு எடுத்துக்காட்டாக வழிகாட்டியாக இருக்கிறார் என்பதில் ஐயமில்லை. இவரது வாழ்க்கை மேலும் சில கார்மேல் தியான அருட்சகோதரிகளுக்கு வழிகாட்டியாக இருந்து அவர்களைப் புனிதர்களாக உயர் த்தியுள்ளது. புனித குழந்தை இயேசுவின் தெரேசா, புனித பரமதிரித்துவத்தின் எலிசபெத், புனித அல்போன்சா, பலஸ்தீன அருட்சகோதரி சிலுவையிலறையப்பட்ட இயேசுவின் மேரி போன்ற பலர் அவரின் அடிச்சுவட்டைப் பின்தொடர்ந்து வாழ்ந்திருக்கின்றார்கள்.

(முற்றும்)

---

## யாழ்ப்பாண...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் முறைப்படியான கத்தோலிக்க மறைபரப்புப்பணி 1542க்குப் பின்னர் தான் முன்னெடுக்கப்பட்டதெனலாம். அவ்வாண்டில் பிரான்சிஸ்கன் சபைக்குருவாகிய ஹென்றிக் அடிகளாரின் வற்புறுத்தலால் கோட்டே அரசன் 7வது புவனேகபாகு (1521-1551) இலங்கைக்கு ஒரு தொகுதி மறைப்பணியாளரை அனுப்பும்படி போத்துக்கல் அரசனாக அப்போது இருந்த 3வது ஜோனிடம் (1521-1557) தூதுக்குழுவொன்றை அனுப்பினான். அதற்கிணங்க போர்த்துக்கல் அரசன் 1543ல் ஜோவாவோ டோ வில்லா டோ கொண்டே அடிகளின் தலைமையில் 6பேர் கொண்ட பிரான்சிஸ்கன் சபைக்குருக்களை அனுப்பினான். அதன் பின்னர் முறைப்படியான மறைப்பணி பல இடங்களில் குறிப்பாக மேற்குக் கரையோரப்பகுதிகளிலும் யாழ்ப்பாண அரசிலும் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

## தோற்றம்

### முதல் ஆயர் நியமனம்

இலங்கை, இந்தியா மற்றும் பல தூரகிழக்கு நாடுகள் உட்பட்ட நாடுகளைத் தன்னகத்தே கொண்ட கோவா மறைமாவட்டம் 1534ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது என்று பார்த்தோம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “இரக்கத்தின் திருமுகம்” - *Misericordiae Vultus*

## யூபிலி ஆண்டுத் திருமடல்

- தொடர்ச்சி

*தமிழாக்கம்: அருட்சகோதரன் ரஞ்சன் சேவியர்*

### இறைவனின் இரக்கத்தின் யூபிலி ஆண்டை அறிவிக்கிறோம்

1. இரக்கம் மிகுந்த இறைதந்தை தமது இரக்கமும் அருளும் நிறைந்த, சினம் கொள்ளத் தயங்குகின்ற, பேரன்பு நிறைந்த, நம்பிக்கைக்குரிய இறைத்தன்மையை மோயீசனுக்கு வெளிப்படுத்தினார். (வி.ப 34:6). ஆயினும் அதன் பின்பும் தமது இறைசாயலைப் பல்வேறு வழிகளிலேயே தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றார். காலம் நிறைவேறிய போது (கலா 4.4) தமது மீட்புத் திட்டத்தின் முழுமையும், நிறைவுமாக தமது ஒரே மகனை கன்னி மரியிடம் பிறந்தவராக இவ்வுலகிற்கு அனுப்பினார். இவ்வகையில் தமது முழுமையான அன்பை ஸ்திரநிலையில் வெளிப்படுத்தினார். இதனைத்தான் யோவான் நற்செய்தியாளர் 'என்னைக் காண்பவர் என் தந்தையைக் காண்கிறார்' என கூறுகின்றார் (யோவான் 14:9). நாசரேத்து இயேசு தமது வார்த்தைகளாலும், வாழ்வினாலும் தமது முழு இருப்பினாலும் இறைதந்தையின் இரக்கத்தை வெளிப்படுத்துகின்றார்.

2. இந்த அளவுகடந்த இரக்கத்தினை நாம் தொடர்ச்சியாகத் தியானிக்க வேண்டும். அவ்வாறு தியானிக்கும் போது அவ்விரக்கம் எம்மில் பீறிட்டுப் பாயும் மகிழ்ச்சியையும், மன அமைதியையும் ஏற்படுத்தும். எமது மீட்பு இவ்விரக்கத்திலேயே தங்கியுள்ளது. இரக்கம் என்கின்ற வார்த்தை தூய திரித்துவத்தின் மறை பொருளை வெளிப்படுத்துகின்றது. இதே வார்த்தையினூடாகவே கடவுள் எம்மை சந்திக்கின்ற உன்னதமான செயலை செய்கின்றார். இரக்கம் என்பது ஒவ்வொரு மனிதனும் தனது சகோதர சகோதரிகளை கரிசனையோடு நோக்குவதற்கு அவனுடைய இதயத்தில் காணப்படுகின்ற அடிப்படைச் சட்டமாகும். இரக்கம் என்பது கடவுளையும் மனிதனையும் இணைக்கின்ற பாலமாகும். இதன் மூலம் இரக்கம் கடவுள் நம்மை என்றென்றைக்கும், நமது பாவங்களைக் கருத்திற் கொள்ளாமல் அன்பு செய்வார் என்கிற எதிர்நோக்கோடு வாழ எமது இதயங்களைத் திறந்து விடுகின்றது.

3. சில வேளைகளில், இறைதந்தையின் இரக்கத்தின் செயற்பாடுகள் எமது வாழ்வில் நிறைவேறுவதற்குரிய செயற்றிறன் மிக்க அடையாளங்களாக மாற நாம் அழைக்கப்படுகின்றோம். இதற்காகத்தான் நாம் ஒரு பிரத்தியேகமான இறையிரக்கத்தின் யூபிலி ஆண்டினை எமது திருச்சபையில் ஒரு விசேட காலமாக அறிவித்துள்ளோம். இக்காலத்தில் விசுவாசிகளினது சாட்சிய வாழ்வு மேலும் வலுவுள்ளதாகவும், செயற்றிறன் மிக்கதாகவும் வளர்ச்சி பெறும்.

### எல்லா மறைமாவட்டங்களிலும் தூய கதவுகள் திறந்துவைக்கப்படும்

இப்புனித ஆண்டு 2015 மார்கழி மாதம் 8ம் திகதி கன்னிமரியாளின் மாசில்லாத உற்பவ பெருவிழாவோடு ஆரம்பமாகும். இந்த திருவழிபாட்டுப் பெருவிழா கடவுள் வரலாற்று தொடக்கத்திலிருந்தே மனித குலத்திற்கு ஆற்றி வருகின்ற அளவுகடந்த செயல்களை நினைவுபடுத்துகின்றது. ஆதாம் ஏவாளுடைய பாவத்திற்குப் பிற்பாடு கடவுள் மனித குலத்தைத் தீமையின் ஆதிக்கத்துக்குள் அழிந்து போக விரும்பவில்லை. ஆகவே அவர் தமது திருமுகத்தை தூய, மாசற்ற அன்பின் தாயாகிய மரியாவை நோக்கித் திருப்பி மனித குலத்தினை மீட்கின்ற மீட்பரின் தாயாக அவளைத் தேர்ந்தெடுத்தார். மனிதன் பாவ சுமையால் பாதிக்கப்பட்ட போது கடவுள் தனது நிறைவான இரக்கத்தினைப் பொழிந்து பதில் கொடுத்தார். இரக்கம் பாவத்தினை விட மேலானது. எனவே, எவரையும் என்றுமே மன்னிக்கத் தயாராக வுள்ள இறைவனின் அளவு கடந்த அன்பிற்கு யாருமே வரையறை போட முடியாது.

அன்னை மரியாவின் மாசில்லா உற்பவப் பெருவிழாவில் திருத்தூயகத்தின் கதவினைத் திறந்து வைப்பதில் நான் பேருவகை அடைவேன். அந்த நாளில் திறக்கப்படுகின்ற தூய கதவானது இறை இரக்கத்தின் அடையாளமாகக் கருதப்படும். இதனூடாக உள்நுழைகின்றவர்கள் தம்மை ஆறுதல்படுத்துகின்ற, மன்னிக்கின்ற, நம்பிக்கையைக் கொடுக்கின்ற கடவுளை அனுபவிப்பார்கள். தொடர்ந்து வருகின்ற திருவருகைக்காலத்தின் 3ம் ஞாயிற்றுக்கிழமை அன்று உரோமை புனித யோவான் பேராலய புனித கதவு திறக்கப்படும். அதனைத் தொடர்ந்து வருகின்ற வாரங்களில் ஏனைய பாப்பிறைக்காக அமைக்கப்பட்ட ஆலய புனித கதவுகளும் திறக்கப்படும். அதே நாளில் உலகில் உள்ள தலத்திருச்சபைகளிலும், பேராலயங்களிலோ, துணைப்பேராலயங்களிலோ அல்லது விசேடமான சில ஆலயங்களிலோ இரக்கத்தின் கதவு ஒன்று இப் புனித ஆண்டு முழுவதும் திறந்து வைக்கப்பட வேண்டுமென்பதனை நான் அறிவிப்பேன்.

தலத்திருச்சபையின் ஆயர்களின் தீர்மானத்தின் பெயரில் இறைமக்கள் அதிகமாகத் தரிசிக்கின்ற புனித ஸ்தலங்களிலும் இவ் இரக்கத்தின் கதவு திறந்துவைக்கப்படலாம். ஏனெனில் இத்திருத்தலங்கள் இறைமக்களின் மனமாற்றத்திற்கு வழி வகுக்கின்ற பாதைகளாக அமைகின்றன. ஒவ்வொரு தலத்திருச்சபையும் இப் புனித ஆண்டிலே விசேடத்துவமான அருள் நிலையை அனுபவிக்கின்ற, ஆன்மீகப் புதுப்பித்தலைப் பெறுகின்ற வாழ்க்கை முறையில் நேரடியாகப் பங்கு கொள்ள வேண்டும். ஆகவே, இந்த யூபிலி ஆண்டானது உரோமையிலும் ஏனைய தலத் திருச்சபைகளிலும் கொண்டாடப்படுவதன் ஊடாக திருச்சபையின் உலகளாவிய ஒன்றிப்பின் அடையாளம் வெளிப்படும்.

### இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் நிறைவின் ஐம்பதாவது ஆண்டு நிறைவைச் சிறப்பிக்கும் யூபிலி ஆண்டு

4. நான் மார்கழி 8ம் தேதியை தெரிவு செய்தமைக்கான காரணம், அந்நாள் பற்றிய கருத்து திருச்சபையின் அண்மைக் கால வரலாறுகளில் அர்த்தம் மிகுந்து காணப்படுவதனாலாகும். அத்தோடு, இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் நிறைவின் ஐம்பதாவது ஆண்டு நிறைவிலேயே நான் திருத்தூயகக் கதவினைத் திறப்பேன். இந்த திருச்சங்கத்தின் ஆண்டு நிறைவினை நினைவு கூருவதன் அவசியத்தைத் திருச்சபை நன்கு உணர்ந்துள்ளது. இத்திருச்சங்கத்தின் மூலம் திருச்சபை ஒரு புதிய படிநிலைக்குள் உள்வாங்கப்பட்டது. இத்திருச்சங்க தந்தையர்கள் இறை ஆவியின் துணையோடு, இறைமக்களுக்கு இறைவனைப் பற்றி புரியக்கூடிய வகையில் பேச வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர். திருச்சபையை பல ஆண்டுகளாக சூழ்ந்திருந்த கோட்டைச் சுவர்கள் தகர்க்கப்பட்டு நற்செய்தியைப் புதிய முறையில் அறிவிக்கின்ற காலம் பிறந்தது. ஏற்கனவே தொடக்கத்தில் இருந்த நற்செய்தி அறிவிப்பின் புதிய பரிணாமமே இதுவாகும். கிறிஸ்தவர்கள் புது உற்சாகத்தோடும், ஆழமான மன உறுதிப்பாட்டோடும் தமது விசுவாசத்தை அறிக்கையிடுவதற்கு இத் திருச்சங்கம் ஒரு புதிய உந்துகோளாகும். இறைத்தந்தையின் அன்பின் அடையாளமாக இவ்வுலகில் வாழ வேண்டிய தன் அவசியத்தை திருச்சபை இத்தருணத்தில் உணர்ந்து கொண்டது.

இத்தருணத்தில் புனித 23ம் யோவான் திருச்சங்கத்தை கூட்டிய போது உச்சரித்த வார்த்தைகளை நாம் நினைவு கூருகின்றோம். "கிறிஸ்துவின் மணமகளாகிய திருச்சபை கடினமான வழிமுறைகளையன்றி இரக்கம் நிறைந்த அணுகுமுறையையே விரும்புகின்றாள்... கத்தோலிக்க திருச்சபையானது தனது கத்தோலிக்க உண்மையை உயர்வாகக் கருதுகின்ற இந்த பொதுசங்கத்தில், தன்னை ஒரு அன்பு மிகுந்த தாயாகவே வெளிப்படுத்த விரும்புகின்றாள். தன்னை விட்டுப் பிரிந்து சென்ற பிள்ளைகள் மட்டில் பொறுமையுள்ள, இரக்கம் மிகுந்த, அளவு கடந்த நன்மைத்தனங்கள் நிறைந்த தாயாகத் தன்னை காண்பிக்க விரும்புகின்றாள்."

*- தொடரும்*

# தேசிய மட்டத்தில் நடைபெற்ற வேதாகமப் போட்டி முடிவுகள்

தேசிய மறைக்கல்வி நடுநிலையமும், கிறிஸ்தவ அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடாத்திய திருவிவிலியப் போட்டி தேசிய மட்டத்தில் 17.10.2015 அன்று கம்பஹா திருச்சிலுவைக் கல்லூரியில் நடைபெற்றது. யாழ். மறைமாவட்டத்தின் சார்பில் இப்போட்டியில் கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவுகளில் முறையே வேதாகமப் பேச்சுப்போட்டி, வேதாகம அறிவுப்போட்டி, வேதாகம நாடகப்போட்டி என்பவற்றில் பங்கு பற்றி வெற்றியீட்டியோருக்கும் சிறப்பாக அணிகளின் தலைவர்களுக்கும், அவர்கள் பாடசாலை அதிபர்கள், பிள்ளைகளைத் தயார் செய்த ஆசிரியர்கள், அவர்கள் பெற்றோருக்கும் எமது பாராட்டுக்கள்.

சிறப்பாக பாடசாலை மட்டத்திலும், வலய மட்டத்திலும், மறைமாவட்ட மட்டத்திலும் நடைபெற்ற போட்டிகளுக்கு அனுமதி வழங்கிய வடமாகாணக கல்விப் பணிப்பாளர் கிறிஸ்தவ பாடத்துக்குப் பொறுப்பாக உள்ள வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## வெற்றியீட்டியோர் விபரங்கள்

**பேச்சுப் போட்டி :**

**மத்திய பிரிவு - 2ம் இடம்**
செல்வன் அகஸ்ரின் டெனிஸ்ரன்
யாழ். மணல்காடு றோ.க.த.க. பாடசாலை

**மேல் பிரிவு - 2ம் இடம்**
செல்வி ஆன். யூடிற்றா அன்ரன் விஜேந்திரன்
யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் தேசியப் பாடசாலை

**வேதாகம அறிவுப்போட்டி :**

**கீழ்ப்பிரிவு - 1ம் இடம்**
யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் தேசியப் பாடசாலை

**மத்திய பிரிவு - 3ம் இடம்**
யாழ். கரம்பொன் சிறிய புஷ்பம் மகளிர் மகா வித்தியாலயம்

**வேதாகம நாடகப் போட்டி :**

**கீழ்ப்பிரிவு - 1ம் இடம்**
யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி

**மத்திய பிரிவு - 1ம் இடம்**
யாழ். நாவாந்துறை றோ.க.த.க. வித்தியாலயம்

**மேல் பிரிவு - 1ம் இடம்**
யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் தேசியப் பாடசாலை

### தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்கள் விபரம்

### சிறந்த நடிகர்களுக்கான தங்கப்பதக்கம் பெற்றவர்கள்

**கீழ்ப்பிரிவு**
செல்வன் சீசர் குகேந்திரன்
யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி

**மேல் பிரிவு**
செல்வி பவுஸ்ரினா யேசுராசா
யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் தேசியப் பாடசாலை

### வேதாகம அறிவுப் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றவர்

**கீழ்ப்பிரிவு**
செல்வி நிதர்சனா சகாயநாதன்
யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் தேசியப் பாடசாலை

*இயக்குநர்*
*யாழ். மறைக்கல்வி நடுநிலையம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பம் பற்றிய உலக ஆயர் மாமன்றம்

## 94 தீர்மானங்களுடன் மாமன்ற இறுதி ஏடு திருத்தந்தையிடம் சமர்ப்பிப்பு

இம்மாதம் 4ம் தேதி முதல் 25ம் தேதி வரை இடம்பெற்ற உலக ஆயர் மாமன்றத்தின் 94 தீர்மானங்கள் அடங்கிய ஏடு, பெரும்பான்மை அங்கத்தினர்கள் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டு, திருத்தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குடும்பம் குறித்த இம்மாமன்றத்தின் முடிவுகளை ஏற்றுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அவற்றை உன்னிப்பாக வாசித்த பின்னர், தன் கருத்துக்களை வெளியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் உள்ள அனைத்துக் குடும்பங்களின் மகிழ்வையும், நம்பிக்கைகளையும், சோகங்களையும், எதிர்பார்ப்புகளையும் மனதில்கொண்டு, இரக்கத்தின் உண்மை அர்த்தத்தைக் காண்பித்த இயேசுவின் பாதையில் இந்த 94 தீர்மானங்களையும் எடுத்ததாக, திருத்தந்தையிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஏட்டின் முகவுரையில் கூறப்பட்டுள்ளது.

குடும்பங்களுக்கு உதவ விரும்பும் திருஅவை, சில நேரங்களில் குடும்பங்களின் அருகே மௌனமாக நின்று செவிமடுப்பதாகவும், வேறு சில நேரங்களில் குடும்பங்களின் முன்னே சென்று வழி காட்டுவதாகவும், ஏனைய வேளைகளில் அவற்றின் பின் நின்று ஆதரவையும் ஊக்கத்தையும் கொடுப்பதாகவும் இருக்கவேண்டும் என அவ்வேடு வலியுறுத்துகின்றது.

திருஅவையின் அனுமதியின்றி மணமுறிவு பெற்று, மறுமணம் புரிந்தவர்களை, திருஅவை, தாய்க்குரிய பண்புடன் புரிந்துகொண்டு வழிநடத்த வேண்டியது குறித்து இவ்வேட்டில் பரிந்துரைகள் முன்வைக்கபட்டுள்ளன.

## நீங்காத நினைவுகள்

27ம் ஆண்டு

3ம் ஆண்டு





**பேதுறுப்பிள்ளை ஜேம்ஸ் அமிர்தநாயகம்**

(ஆசிரியர், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி)

மண்ணில் 22.02.1912 விண்ணில் 05.11.1988

**அலெக்சாந்திரா அமிர்தநாயகம்**

(ஆசிரியை, யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடம்)

மண்ணில் 26.02.1924 விண்ணில் 05.11.2012

*"ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டவரே பேறுபெற்றவர்"*

காலங்கள் கடந்தவரை
காலம் எல்லாம் கல்வியினால் கற்று
கற்றதனைத்தையும் வாழ்வாக்கி,
தம் வாழ்வினையே கல்வியாக்கி,
கல்வியோடு கருணை, பக்தி, பண்புகளைப் புகட்டி,
எம் வாழ்வில் நாம் முன்செல்ல,
முன்னுதாரணம் காட்டினீர்கள்-
காலங்கள் பல கடந்தாலும்
இறைவழி நடந்து, செபத்தால்
உம்மை நினைத்து, உங்கள் ஆன்மா
சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்.

AD 82

பாசமுடன் நினைவுகூரும்
பிள்ளைகள், உறவுகள்

யாழ்ப்பாணம்.

## விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவு

அன்னை மடியில் 20 . 04 . 1943

ஆண்டவன் அடியில் 25 . 09 . 2015



**அமரர் திருமதி. அந்தோனிப்பிள்ளை அமிர்தநாயகி (செல்வராணி)**

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்"

அன்பின் ஊற்றாய் பாசத்தின் உருவமாய்
பண்பின் இருப்பிடமாய் குடும்பத்தின் குலவிளக்காய்
எங்களின் வளர்ச்சிக்கு வித்திட்ட
எங்கள் அன்புத் தெய்வமே

மாதம் ஒன்று ஆனாலும் மாறவில்லை அம்மா எம்துயர்
கூடவிருந்து வாழ்வோமென எண்ணியிருக்க
எதிர்பாராத விதத்தில் இடையிலே எம் எல்லோரையும்
விட்டுப்பிரிந்த மர்மம் தான் என்ன?

AD 83

உயரப்புலம்
ஆனைக்கோட்டை

இவரது அன்பில் நிலைத்திருக்கும்
குடும்பத்தினர்

## நெடுந்தீவுப் பங்கின் கத்தோலிக்க ஆசிரியர் தினவிழா

நெடுந்தீவுப் பங்கின் கத்தோலிக்க ஆசிரியர் சங்கமானது மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. பங்குத் தந்தை மற்றும் உதவிப் பங்குத்தந்தை ஆகியோரின் வழிகாட்டலில் பல பணிகளில் பங்கெடுக்கின்றார்கள். அவ் ஆசிரியர்களைக் கௌரவப்படுத்தும் முகமாக மறைபரப்பு ஞாயிறு தினமாகிய அன்றைய தினமும் ஆசிரியர் தினமும் இணைந்து சிறப்பிக்கப்பட்டது.

18.10.2015 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 திருப்பலியுடன் விழா ஆரம்பமானது. திருப்பலியின் ஆரம்பத்தில் ஆசிரியர்கள் அனைவருக்கும் மாணவர்கள் மலர்த்தூவ பவனியாக அழைத்து வரப்பட்டனர். இத்திருப்பலியினை யாழ்/புனித பத்திரிசியார் கல்லூரியின் உப அதிபர் அருட்தந்தை பீ. திருமகன் அடிகளார் அவர்கள் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். அவருடன் இணைந்து பங்குத்தந்தை செ.நேசநாயகம் அடிகளாரும் உதவிப் பங்குத்தந்தை மை.நிக்சன் கொலின் அடிகளார் அவர்களும் ஒப்புக்கொடுத்தார்கள். திருப்பலியில் மறையுரை ஆற்றிய அருட்தந்தை அவர்கள் மறைபரப்பு ஞாயிறின் முக்கியத்துவத்தைப் பற்றியும் ஆசிரியத்துவம் பற்றியும் சிறப்பாக எடுத்தியம்பினார். திருப்பலியின் நிறைவில் ஆசிரியர்கள் அனைவரும் தங்கள் அர்ப்பணவாக்குறுதியைப் புதுப்பித்தார்கள். அதனைத் தொடர்ந்து கத்தோலிக்க ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு.அ. அருள்நேசன் அவர்களால் நன்றியுரை நிகழ்த்தப்பட்டது.

வழிபாடுகள் அனைத்தும் கத்தோலிக்க ஆசிரியர்களால் சிறப்பிக்கப்பட்டது.

இந்த விழாவில் பங்குபற்ற அனைத்து பாடசாலைகளுக்கும் அழைப்பு விடப்பட்டது. பாடசாலை அதிபர்களின் ஒத்துழைப்புடன் ஒரு சில இந்து ஆசிரியர்களும் கலந்துகொண்டமை சிறப்பு மிக்க விடயமாகும்.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட நெடுந்தீவுக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. அ. தேவசுதன் தலைமையில் இந்த விழாவானது சிறப்பாக நடைபெற்றது.

## 1ம் ஆண்டின் நெஞ்சகலா நினைவுகள்

பிறப்பு 17 . 03 . 1933

இறப்பு 01 . 11 . 2014



**அருட்சகோதரி. மேரி பிறிசில்லா போல்**

(திருக்குடும்பக் கன்னியர் சபை)

ஓர் ஆண்டு சென்றும் எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்காத உம் செயல்கள்
சிறுவயதில் தூக்கி வளர்த்தீர், பெரியவனாகியும் இறைவன் பாதையில்
வழிநடத்தினீர். எங்கள் குடும்பத்தையும் வழிநடத்தினீர். நீங்கள்
செல்லுமிடமெல்லாம் திருக்குடும்ப சபையை பெலப்படுத்தி வழிநடத்தினீர்
உம்முடைய எல்லா செயல்களும் எங்கள் இதயங்களில்
நீங்காத இடத்தைப் பிடித்துள்ளது.

AD 85

"ஆண்டவர் பாதத்தில், விண்ணவர் கூட்டத்தில்,
தாங்கள் மகிழ்ந்திருக்க இறைவனை வேண்டுகின்றோம்."

இவருடைய ஆன்ம சாந்திக்காகத் திருப்பலிப் பூசைகள் 04.11.2015 யாழ் மரியன்னை பேராலயத்தில் காலை 6.00 மணிக்கும், மட்டக்களப்பு தாண்டவன்வெளி காணிக்கை மாதா ஆலயத்தில் காலை 11.00 மணிக்கும் நடைபெறும்.

4A, அச்சுக்கூட வீதி,
யாழ்ப்பாணம்.

நீங்காத நினைவுடன்
போல் தேவநாயகம், குடும்பத்தினர்

## 31ம் நாள் நினைவஞ்சலி



**திருமதி. திரேசா புஸ்பம் கிறகறி (மம்மி)**

மண்ணில் 27.03.1926 விண்ணில் 27.09.2015

எங்கள் குடும்பத்தின் அன்புக் குலவிளக்கே,
மறக்க முடியவில்லை, உம் நினைவுகளை,
கண்களால் கண்ணீர் விடுவதை
தடுக்க முடியவில்லையே –தாயே
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து
ஒரு மாதம் ஆனாலும், நினைவிலும் கனவிலும்
நீங்கள் எம்மோடு உள்ளீர்கள்.
என்றே உணர்கின்றோம்.
என்றும் எம் வாழ்வோடு கலந்த,
உயிரே மம்மி! உங்கள் உடல் மறைந்தாலும்
அழிவில்லா ஆன்மாவாக என்றும்
எம் இதயத்தில் வாழ்கின்றீர்கள்! தாயே.



AD 84

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் , மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்டு, அன்பும், பண்பும் இறைப்பற்றோடும் வாழ்ந்து, இவ்வுலகை விட்டுப் பிரிந்த எமது தாயின் ஆன்மா இறைவனிலே இளைப்பாற செபிக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

**பிரிவால் பரிதவிக்கும் பிள்ளைகள்,**

திருமதி ஆஞ்சலா குணரத்தினம்
அருட் சகோதரி மேரி மில்றட்
(செபமாலைக் கன்னிகை)
திருமதி லூட்ஸ் சபீனா

திரு.மரியதாஸ் கிறகறி
திருமதி. மரியா பஸ்ரியன்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அருள் தரும் ஆண்டில் அனைவருக்கும் புது வாழ்வு"

### உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய ஜுபிலி ஆண்டு யாழ் ஆயரால் 29.09.2015 இல் பிரகடனம்

அருள்தரும்ஆண்டில்அனைவருக்கும் புது வாழ்வு எனும் விசுவாசப்புரட்சியுடன் உரும்பிராய் பங்கின் புனித மிக்கேல் ஆலய ஜுபிலி ஆண்டு யாழ் ஆயர் அதிவணக்கத்துக்குரிய பேரருட்கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களால் 29.09.2015 புனித மிக்கேலின் திருவிழாத் திருப்பலியின் போது கொடியேற்றி பிரகடனம் செய்யப்பட்டது. திருத்தந்தையின் கொடியினை ஆயர் அவர்கள் ஏற்றி வைக்க, ஜுபிலிக் கொடி இளவாலை மறைக்கோட்ட குரு முதல்வர் அருட்பணி யூஜின் அவர்களாலும், புனித மிக்கேலின் கொடி பங்குத்தந்தை அருட்பணி வசந்தன் அவர்களாலும் ஏற்றி வைக்கப்பட்டது.

தொடர்ந்து திருநாள் திருப்பலி ஆயர் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. இதில் மறைபரப்பில் பேரார்வம் கொண்ட முத்தமிழ் வித்தகர், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் பணி நினைவு கூரப்பட்டது, அவர் விதைத்த விசுவாச வித்து நூறு மடங்காகப் பலன் கொடுத்ததை தாம் கண்களால் காணுவதாக ஆயர் அவர்கள் தனது மறையுரையில் பெருமிதம் கொண்டார்.

திருப்பலி நிறைவில் ஆயர் அவர்களால் ஜுபிலி ஆண்டு ஞாபகார்த்தமாக சந்தன மரம் ஆலய முன்றலில் நடப்பட்டதுடன் பங்கு மக்களின் வீடுகளிலும் இந்த மரம் நடும் பணி தொடரப்பட வேண்டி பல பயன்தரும் மரங்கள் அன்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது. "இயற்கை இறைவனால் நமக்குத் தரப்பட்ட அழகிய வீடு" எனும் திருத்தந்தையின் கருத்து இங்கு நினைவு கூரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இறுதியாக புனித மிக்கேலின் திருச்சொரூபம் பவனியாக எடுத்துவரப்பட்டு பங்கின் முதல் குருமணி போல் நட்சத்திரம் அ.ம.தி அவர்களால் திருச்சொரூப ஆசீர் வழங்கப்பட்டது.

முன்னதாக நவ நாள் வழிபாடுகள் யாவும் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டதுடன் அருட்பணி ரமேஷ் அ.ம.தி அவர்களால் மறையுரைகள் வழங்கப்பட்டு மக்களின் ஆன்மீக வாழ்வு நெறிப்படுத்தப்பட்டது. ஜுபிலி ஆண்டு என்றால் என்ன? அதனை நாம் எப்படி எதிர்கொள்ளவேண்டும்? எனும் விளக்கம் "மாதா தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த அருட்பணி ஆல்பர்ட் அவர்களால் "ஸ்கைப்" தொழில் நுட்பம் மூலம் பங்கு மக்களுக்கு வழங்கப்பட்டது சிறப்பம்சமாகும். நற்கருணை விழாத் திருப்பலி வணக்கத்துக்குரிய யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்கலாநிதி ஜஸ்டின் ஞானப்பிரகாசம் அவர்களால் நிறைவேற்றி வைக்கப்பட்டது.

அனைத்தையும் வெகு சிறப்பாகத் திட்டமிட்டு ஆயத்தம் செய்து வழிநடத்திய புதிய பங்குத்தந்தை அருட்பணி வசந்தன் அவர்களைப் பங்கு மக்கள் பாராட்டி நினைவு கூர்ந்தமை குறிப்பிடத்தக்கது.




கிளரீசியன் வெளியீட்டகம்
உங்கள் ஆன்மீகத் தோழன்
வெளியிடும்
விவிலிய நாட்குறிப்பேடு 2016
உங்கள் நாளாந்த ஆன்மீக பாதைக்கு வழிகாட்டும் தோழன்

- வருடாந்தம் வெளிவரும் இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் திருவழிபாட்டு நாட்காட்டிக்கமைய எழுதப்பட்டது.
- முழுமையான முதலாம், இரண்டாம், நற்செய்தி வாசகங்களுடன் அன்றாட சிந்தனைகள்.
- இலங்கையிலுள்ள பல்வேறு மறைமாவட்டங்களையும் சார்ந்த குருக்கள், துறவிகளாலும், பொதுநிலையினராலும் எழுதப்பட்ட நற்சிந்தனைகள்.
- ஞாயிறு தினத்திற்குரிய திருப்பாடலும், பதிலுரையும்.
- தினசரி குறிப்புக்களை எழுதுவதற்கான இடைவெளிகள். பாடசாலை மாணவர்களுக்கு ஏற்ற விதத்தில் சிறப்பாக தயாரிக்கப்பட்ட விசேட பதிப்பு
- தரமான தாள்களில் நால்வர்ணங்களில் அச்சிடப்பட்டுள்ளது.



தொடர்புகளுக்கு அழையுங்கள்:
011 295 3434 / 077 803 2348
யாழ்ப்பாணம் 0766 399 114
மின்னஞ்சல்: claretpu@gmail.com
AD 86


# "நிலையில்லா வாழ்வியலில் நிலையான இடத்தைப் பிடிப்பவர்கள் ஆசிரியர்கள்"

### மன்னார் மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர்.

யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் தினவிழா 10.10.2015 அன்று யாழ் மறைக்கல்வி நிலையத்தில் இடம் பெற்றது. இவ்விழாவிற்கு பிரதமவிருந்தினராக வருகைதந்த அருட்தந்தை. றெஜினோல்ட் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் தமது கருத்தில் நிலையான நற்பேறுள்ள சமூகத்தைக் கட்டியெழுப்பும் பணியில் அயராது உழைக்கும் ஆசான்களின் பணி மகத்தானதும் சமூகத்தால் மறக்கப்படாததுமாகும். ஒரு மாணாக்கனை நல்லவனாகவோ தீயவனாகவோ உருவாக்கும் நிலையில் பெரும்பான்மையான பணி ஆசிரியர்களின் கையில் தான் தங்கியுள்ளது. எனவே ஒவ்வொரு ஆசானும் மாணவர்கள் தம்மை யார் என்று சொல்லுகிறார்கள்? என அடிக்கடி தம்மைக் கேட்டுஆய்வு செய்பவர்களாக இருக்க வேண்டும். இவர்கள் தந்தையாம் இறை வனின் பாரபட்சமற்ற அன்பை யும் இறைமகன் யேசுவின் முன் மாதிரிகையான ஆசிரியத்துவத்தையும் கொண்டு தூய ஆவி யின் நெறிப்படுத்தலில் வழி நடக்கும் பொறுப்பு சிறப்பாகக் கத்தோலிக்க ஆசிரியருக்கு உண்டு என்பதை மறந்துவிட முடியாது.

சமகால சூழ்நிலையில் ஆசிரியத்துவப் பணி மிகுந்தசவால்களும்பல நெருக்கிடைகளும்கனமான சுமைகளையும் கொண்டு விளங்குகின்றது. இரு பக்கமும் கருக்குள்ளவாளில் நடப்பது போன்ற பணியெனினும் இத்தகைய நெருக்கிடைகளுக்கூடாகவே சிறந்த தலைமுறையினரை உருவாக்கி நிலையில்லா வாழ்வியலில் நிலையான இடத்தைப் பிடிப்பவர்களாக ஆசிரியர்கள்துலங்குகின்றனர். எனவே அவர்களுக்கென விழா எடுத்து அவர்களைப் பாராட்டுவதும் நன்றி தெரிவிப்பதும் சிறந்த சமூகப் பண்பாகும்.

இவ் விழாவிற்கான திருப்பலியினை குருத்துவப்பொன் விழாநாயகன் அருட்பணி. றெஜிராஜேஸ்வரன் அவர்கள் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார். விழாஒழுங்குகள் யாவும் யாழ் மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்பணி. அகஸ்ரீன் அவர்கள் மேற்கொண்டார். விழா நிகழ்வுகள் யாவும் தலைவர், அதிபர். திரு.பங்கிராஸ் (மாதகல் சென்.ஜோசப் ம.வி) தலைமையில் நடைபெற்றது. யாழ் மறைமாவட்டத்திலிருந்து ஏறக்குறைய 60 ஆசிரியர்கள் வரைவருகைதந்து சிறப்பித்திருந்தனர். எனினும் எதிர்காலத்தில் மேலும் பலஆசிரியர்கள் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென்ற கருத்து கவனத்தில் கொள்ளப்பட்டது.

*தகவல்: எஸ்.எம்.வுளோறன்ஸ்*

## அருட்தந்தை J.C. பாஸ்கரன் அடிகளின் தந்தையார் இறைபதமடைந்தார்

வட்டக்கச்சிப் பங்குத்தந்தை அருட்தந்தை J.C. பாஸ்கரன் அடிகளின் அன்புத் தந்தையார் திரு. சவிரிமுத்து ஞானப்பிர காசம் அவர்கள் கடந்த 19-10-2015ல் கடனாவில் காலமானார். அவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுவதோடு அருட் தந்தை பாஸ்கரன் அடிகளுக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் பாதுகாவலன் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.


## பணியாளர் தேவை



"லதனி" இல்லம்,
3ம் கட்டை,
சிலாவத்தை,
முல்லைத்தீவு.

மேற்படி விலாசத்தில் இருக்கும் சிறுவர் இல்லத்தில் வேலை செய்ய காப்பாளருக்கும் (Matron), உதவிக் காப்பாளருக்குமான வெற்றிடங்கள் உண்டு. விரும்புவோர் கார்த்திகை 30ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

வயதெல்லை - 30 - 60
தொடர்புக்கு - 077 302 3619

இயக்குனர்,
"லதனி" தலைமைக் காரியாலயம்
லன்சிகம,
கட்டுநேரியா.



AD 72


## பாதுகாவலனின் அடுத்த இதழ் புதிய ஆயரின் திருப்பொழிவுச் சிறப்பிதழாக

**வருகிற 22-11-2015ல் வெளிவரும்.**

இச் சிறப்பிதழுக்கான தங்கள் ஆக்கங்களை கூடிய விரைவில் எமக்கு அனுப்பி வையுங்கள். புதிய ஆயர் பற்றி ஏற்கனவே எமக்குக் கிடைக்கப்பெற்ற ஆக்கங்கள் இச் சிறப்பிதழில் வெளிவரும்.

- ஆசிரியர் -


## முதலாம் ஆண்டு நினைவு



அமரர் யோசவ் பிரான்சிஸ் சேவியர் (சந்திரன்)

அன்னை மடியில் 01.08.1946
இறைவன் அடியில் 09.11.2014

"இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய் என்று உறுதியாக நான் உனக்குச் சொல்லுகிறேன்" லூக். 23:43

ஓராண்டு காலம் கொடிய பொழுதாய் மறைந்தாலும்
தீராது உங்கள் பிரிவுத்துயர்
எம் உள்ளங்களில் நிறைந்து தோன்றாத் துணையாக
எம்மை வாழ வழிகாட்டும் அன்பு அப்பாவே
இறைவனுடன் நீங்கள் இன்புற்று வாழ எம்
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

AD 80


பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் 09.11.2015 திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் ஆன்ம சாந்தித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பாண்டியன்தாழ்வு
யாழ்ப்பாணம்.

மனைவி, மகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டில் அருட்தந்தை லக்ஸ்மனுக்காக ...



கடலோரக் கனவுகள், கவிபாடும் நினைவுகள்
கடந்து வந்த பாதைகள் -நீங்கள்
சுழன்று திரிந்த வீதிகள்
துள்ளித் திரிந்த போதெல்லாம்
பின்னால் துயரம் வருமென்று -நாம்
எண்ணவில்லையே...!
இளமையின் துடிப்பும், உங்கள் தணியாத் தாகமும்,
புயலாய் எழுமுன் பணியின் வேகமும் இதற்குத் தானோ?

இரண்டாயிரத்து பன்னிரண்டு ஆனி இருபத்திரண்டு
எம் பங்கிற்கு உதவிப் பங்குத்தந்தையாக வந்தவரே...
அன்பின் உறைவிடமாய், அகிலத்தின் ஒளி நிலவாய்
நின்ற எம் தந்தையே... - உங்கள்

ஒளி இழந்து இன்று தவிக்கின்றோம்
சிறகொடிந்து சிறையடைத்து -வாழும்
வாழ்வு மட்டும் இன்று நிஜமாகியே நிற்கின்றதே...!
அழியா உங்கள் பணியின் வேட்கையும்,

அடுத்தவர் பழித்திடாத, உங்கள் வாழ்க்கையும்,
யேசுவின் வாழ்வின் சாட்சியாய்,
உருத்துடை நாயகனாய் உருப் பெற்றெழுந்தவரே...!
எத்தனை எத்தனை துன்பங்கள், இழப்புக்கள்
என ஏங்கிய எமக்கு -ஆறுதலாய்
இருந்த எம் தந்தையே -அதில்
உங்கள் இழப்பு ஒன்றாகி விட்டதுவே...!

கரையோரம் அமைதியாய் கரைந்த
காலமெல்லாம் விரை கொண்டு மறைந்து
மூன்றாண்டுகள் சென்றுவிட்டது -எம் தந்தையே
உம் நினைவுகள் நிழலாகவே எம்மைத் தொடர்கிறது...

செ. டன்சி
முல்லைத்தீவு
புனித இராயப்பர் ஆலயம்

**நவம்பர் மாதம்**
**இறந்துபோனவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காகச் செபிப்போம்**

**நித்திய இளைப்பாற்றியை அவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே! முடிவில்லாத ஒளி அவர்கள் மேல் ஒளிர்வதாக!**

## போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் ஒரே வழி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு: யாழ். புதிய ஆயர்



போரால் பாதிக்கப்பட்ட விதவைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் எடுக்கும் முயற்சி சொற்பம். அதனால் தான் திருச்சபை, நிறுவனங்கள் என்பன சிலசில உதவிகளை வழங்க முன்வருகின்றன. இலங்கை அரசு பொறுப்பெடுத்து கூடியளவான உதவிகளை விதவைகளுக்குச் செய்ய முன் வர வேண்டும் என யாழ். மறைமாவட்ட புதிய ஆயர் பேரருட்திரு. ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகை எடுத்துரைத்தார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அருள் கேசப். மற்றும் வோசிங்டன் பெண்கள் விவகார பொறுப்பதிகாரி கத்தரின் ருசல் ஆகியோர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து ஆண்டகையுடன் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இதன்போது அமெரிக்க தூதுவர் போரால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கு இலங்கை அரசால் முழுமையான உதவிகள் வழங்கப்படுகின்றனவா? என்ற கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

கடந்த 25ஆண்டுகளாக இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் மக்கள் மீளக் குடியேற வேண்டும் மற்றும் எவ்வித விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும் இவை முக்கியமான தமிழர்களின் பிரச்சினையாக இருக்கிறது என்றார்.

மேலும் யாழ்ப்பாணத்தில் என்னவிதமாக முன்னேற்றத்தை கொண்டு வர முடியும் என்று தூதுவர்கள் யாழ்.ஆயரிடம் கேள்வி எழுப்பினர். அதற்கு ஆயர் இளைஞர்களுக்கு போதியளவு வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தால் வேலையோடு வாழ்க்கையை சந்தோசமாக கழிப்பார்கள். அதுமட்டுமல்ல போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் ஒரே வழி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பே என்று யாழ். ஆயர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.



உரும்பிராய்ப் பங்கில் ஜூபிலி ஆண்டின் ஆரம்ப வைபவ ஞாபகார்த்தமாக ஆயர் அவர்களால் ஆலய வளவில் சந்தன மரம் நாட்டப்பட்டது. (செய்தி 7ம் பக்கம்)







யாழ் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளில் பொதுநிலை நற்கருணைப் பணியாளர்கள் ஏற்படுத்தப்பட்டு வருகிறார்கள். சற்கோட்டை, மண்டைதீவு, கட்டைக்காடு, மணற்காடு, கொழும்புத்துறை ஆகியபங்குகளில் ஏற்கனவே ஆயர் அவர்கள் நற்கருணைப் பணியாளர்களை ஏற்படுத்தியுள்ளார். இதனைத் தொடர்ந்து வருகிற நவம்பர் மாதம் 8ம் திகதி சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயத்தைச் சேர்ந்த மூவருக்கும், யாழ் மரியன்னை பேராலயத்தைச் சேர்ந்த மூவருக்கும், புனித ஆரோக்கியநாதர் ஆலயத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் புனித யுவானியார் ஆலயத்தில் நற்கருணைப் பணியாளர் பணியை ஆயர் அவர்கள் வழங்கவுள்ளார்.



நெடுந்தீவுப் பங்கில் நடைபெற்ற கத்தோலிக்க ஆசிரியர் தின விழாவன்று கத்தோலிக்க ஆசிரியர்கள் பங்குத்தந்தையர்களோடு எடுத்துக்கொண்ட படம் (செய்தி 6ம் பக்கம்)



யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்ற யாழ். மறைமாவட்ட ஆசிரியர் தின விழாவில் சிறப்புரை ஆற்றிய மன்னார் மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்தந்தை றெஜினோல்ட் அடிகளாரையும், கலை நிகழ்ச்சிகளையும் படத்தில் காணலாம் (செய்தி 7ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2015ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.